நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 135/2022

## P.W. 9 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாதேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | T.சாமுண்டி |
| கிராமம் | : | சேலம் |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW9** |
| வயது | : | 62 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 18 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1 ம் எதிரி ஆஜரில் இல்லை. 2 மற்றும் 3 ம் எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.11 PM

1. நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2024 ம் தேதி பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 06.07.2021 ம் தேதி காலை 10.00 மணிக்கு நங்கவள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த

திரு.உதயகுமார் என்பவர் அலுவலில் இருந்தபோது அமிர்தம்(40), க.பெ. சேட்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரினை பெற்று அதன் பேரில் நங்கவள்ளி காவல் நிலைய குற்ற எண்.245/2021 ச.பி. 294(பி), 323, 325, 506(1) இ.த.ச r/w 4 of TNPWH Act ன் கீழ் வழக்கு பதிவுசெய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. இவ்வழக்கில் அவர் புலன் விசாரணைமேற்கொண்டு 06.07.2021 ம் தேதி காலை 11.15 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் லோகநாதன் மற்றும் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். ( **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. அதைதொடர்ந்து சம்பவயிட சாட்சிகளான அமிர்தம், ராஜா, பூபதி, முருகேசன், லோகநாதன், சுரேஷ்,பாலாஜி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளாார். மேட்டுர் அரசு மருத்துவமனையில் சேட்டு மற்றும் மணிகண்டன் இருவரைவும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

4. பின்பு 06.07.2021 ம் தேதி 13.30 மணிக்கு பெரியசோரகை கிராமம், சீரங்கனூர் எதிரியின் வீட்டின் முன்பு வைத்து வெங்கடேஷ், குமார், செல்வம் மூவரையும் கைதுக்கான காரணத்தை கூறி கைதுசெய்தும், அவர்களின் கைதுவிவரத்தை அவரது உறவினர்களுக்கு தெரிவித்தும் எதிரிகள் மூவரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி பணிமாறுதலில் சென்றுவிட்டதால் நான் இவ்வழக்கினை தொடர் புலன்விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கில் காயமடைந்த சேட்டு, மணிகண்டன் இருவரின் காயச்சான்றிதழை பெற்று இருவருக்கும் சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த சேட்டு என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்தேன்.

6. இறுதியாக இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 30.05.2022 ம் தேதி எதிரிகள் வெங்கடேஷ், குமார், செல்வம் மூவரின் மீது ச.பி. 294(பி), 323, 325, 506(1) இ.த.ச r/w 4 of TNPWH Act ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கின் சம்மந்தமாக அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு எதிரிகளின் மீது பொய்யான வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.25 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**